பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி18 திங்கட்கிழமை 04.11.2024 கதிர் 362




புலம்பெயர் தமிழ் பெரு முதலாளிகளால் வடக்கு கிழக்கு அரசியலில் மட்டுமல்ல தெற்கு அரசியலிலும் குளறுபடிகள், சலசலப்புகள் ஏற்படத் ☞2

# பொதுத் தேர்தலுக்கான திகதி இன்று இறுதிசெய்யப்படும்

## உயர் நீதிமன்றில் வழக்கு விசாரணை

2024 பொதுத் தேர்தல் நவம்பர் 14 நடைபெறுமா அல்லது சில தினங்களுக்குத் தள்ளிப்போகுமா என்பது உயர் நீதிமன்றத்தால் இன்று முடிவுசெய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அது தொடர்பான வழக்கு இன்று விசாரணைக்கு வருகின்றது. மனுதாரர் குற்றஞ்சாட்டியிருக்கும் விடயத்தை கருத்தில் எடுத்து தேர்தல் திகதியை ஓரிரு தினங்கள் பிற்போட அரசு இறங்கிவரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசமைப்பில் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தினத்துக்கும் வாக்களிப்பு நடைபெற வேண்டிய தினத்துக்கும் இடையில் உள்ள காலம் பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் காலக் கணக்குக்கு ஒரு நாள் முன்னதாக இப்போது பொது தேர்தல் திகதியிடப்பட்டிருப்ப-து அரசமைப்பு மீறல் எனக் குறிப்பிட்டு உயர்நீதிமன்றில் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. ☞2

## இறக்குமதி தடை இருந்தும் 10 வாகனங்கள் தருவிப்பு

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டதாக கூறப்பட்ட நிலையில், 2023ஆம் ஆண்டு 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரியில்லா அனுமதிப்பத்திரத்தின் கீழ் வாகனங்களை இறக்குமதிசெய்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இலங்கை சுங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள 2023ஆம் ஆண்டு ☞7

## தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் லொஹான்

நீதிமன்றக்காவலில் வைக்கப்பட்டிருந்த சமயம் உடல் நலக் குறைவு காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் ☞8

## விகாரைகளின் பாதுகாப்புக்கு 1,584 படையினர் பணியில்

ஒன்பது மாகாணங்களுடன் தொடர்புடைய 16 மாவட்டங்களில் உள்ள 89 வழிபாட்டிடங்களுக்கு படையினர் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கென 1,584 படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று ☞2

## ஜேவிபி தமிழருக்கு நல்லது செய்யுமென நம்மவர் சிலரே மனப்பால் குடிக்கின்றனர்

### வேட்பாளர் ஐங்கரநேசன் விசனம்

ஜே.வி.பி. தமிழ் மக்களுக்கு நல்லது செய்யும் என்று எமது மக்களில் சிலரும் மனப்பால் குடிக்கிறார்கள். பனை அபிவிருத்திச் சபையின் வளர்ச்சியையே விரும்பாத ஜே.வி.பியா தமிழ் மக்களுக்கான தீர்வைத் தரப்போகின்றது என்று ஜனநாயக தமிழ் அரசுக் கூட்டமைப்பின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் பொ.ஐங்கரநேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞7



## அநுரவும் அவரது ஆளும்தரப்பும் அதிகாரங்களைப் பகிரவேண்டும்

### சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

பதவியில் இருக்கின்ற ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவும் வரவிருக்கின்ற அவருடைய புதிய ஆளும்தரப்பும் ஆழமாக ஆலோசித்து தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள முன்வரவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவரும் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

யாழ்ப்பாணத்தில் சண்டிலிப்பாயில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஏறத்தாழ முப்பத்தைந்து வருடங்கள் உள்நாட்டுப் போர் என்ற போர்வையில் தமிழ் மக்கள் மீது ஒரு மூர்க்கத்தனமான இராணுவ தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில் இராணுவ தரப்பிலும் போராளிகள் தரப்பிலும் பொதுமக்கள் தரப்பிலுமாக பல இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். 2009ஆம் ஆண்டு போர் முடிவிற்கு வந்தது. ஆகவே கடந்த முப்பத்தைந்து வருட காலத்தில் இந்த நாடு பெரும் அழிவுகளைச் சந்தித்தது மாத்திரமல்லாமல், பெரும் பொருளாதாரப் பின்னடைவுகளையும் சந்தித்தது. அப்பொழுதெல்லாம் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ☞8

## தேமச வாக்குறுதியளித்தபடி எந்த மாற்றமும் வரவில்லை

### சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக மேடைக்கு மேடை நாட்டு மக்களுக்கு பெரும் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் தற்போதைய ஜனாதிபதி ☞7

## வன்முறைகள் அற்ற தேர்தலுக்காக அனைவருமே ஒன்றிணையட்டும்

### கபே அமைப்பு வலியுறுத்து

ஜனநாயகத்தை மதிக்கின்ற வன்முறைகள் அற்ற தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணையவேண்டும் என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் (கபே) நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

கபே அமைப்பின் 'அமைதியான தேர்தலுக்காக ☞7




## சூரசம்ஹாரத்தைப் போன்றே எம்மை பிடித்த எல்லா சண்டாளர்களையும் விரட்டியடிப்போம்

### 'பசு' சின்ன சுயேச்சைக்குழு மக்களுக்கு அறைகூவல்

எம் முப்பாட்டன் முருகன் கந்தசஷ்டி விரதத்தின் இறுதியிலே சூரனைச் சம்ஹாரம் செய்ததைப் போன்று, இந்த நாடாளுமன்றத் தேர்தலைப் பயன்படுத்தி, ஒரு விரல் புரட்சியைப் பயன்படுத்தி தமிழ் மக்களைப் பீடித்திருக்கும் சண்டாளர்களையும் தண்டியக் காரர்களையும் விரட்டியடிப்போம் வாரீர் என்று தெரிவித்தார், 'பசு' சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும் குழுவின் முதன்மை வேட்பாளர் கலாநிதி தேவானந்த்.

தமிழர் சம உரிமை இயக்கமான 'பசு' சின்ன சுயேச்சையின் தேர்தல் அறிக்கையை நேற்று வலி. வடக்கில் வெளியிட்டு வைத்து உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட யாப்பு முன்மொழிவுகளை ஏற்று தமிழர் சம உரிமை இயக்கத்தின் இந்தத் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய சக்தி, தமிழர் சம உரிமை இயக்கம் என்பன தமிழ் மக்களிற்கான பொதுக்கொள்கை பிரகடனமாக இந்தத் ☞7

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தொடங்கியுள்ளன. எல்லாம் பணம் செய்யும் வேலை. இதையெல்லாம் பார்க்கும்போது இந்த விடுதலைப் பயிரை தண்ணீர்விட்டா வளர்த்தோம் சர்வேஸ்வரா செந்நீர் விட்டல்லவா வளர்த்தோம் என்று கதறத்ததான் தோன்றுகின்றது. அது பற்றிய ஒரு தகவலைத்தான் இன்று உங்களுடன் பகிர்ந்துகொள்ளப்போகின்றேன்.

'லைகா' மொபைல் நிறுவனம் கொழும்பில் பிரபா கணேசனுக்குக் கொடுத்த 15 கோடி ரூபாயை அவர் ஆட்டையைப்போட்டுவிட்டார் என்று அவரது கட்சியைச் சேர்ந்த இரண்டுபேரே தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். அக்கட்சியின் கேகாலை மாவட்டத் தலைவர் வசந்தகுமார ரத்னகீர்த்தியும் மற்றொருவருமே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

கட்சியின் தலைவர் பிரபா கணேசன், லைக்கா மொமைல் நிறுவனத்திடமிருந்து, தேர்தல் செலவுகளுக்காக வேட்பாளர்களுக்கு நிதி பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார் என்றும் தமது மாவட்டத்துக்கு 70 லட்சம் ரூபாய் செலவழிப்பார் என்று தெரிவித்திருந்தார் என்றும். பின்னர் அவர் 15 கோடி ரூபாவை லைக்கா நிறுவனத்திடமிருந்து பெற்றுவிட்டு வாக்குறுதி அளித்தவாறு அந்தப் பணத்தைத் தராது தானே கையாடிவிட்டார் என்றும் அந்தக் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் லைகா நிறுவனத்தின் கட்சி எனத் தெரிவிக்கப்படும் ஐக்கிய ஜனநாயக் குரல் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளரான பிரசன்ன அதிகாரி நேற்று செய்தியாளர் மாநாடு நடத்தி லைகாவின் கட்சிகளுக்கான பணப் பரிமாற்றங்கள் குறித்துக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

பிரபா கணேசனுக்கு மட்டுமல்ல அதேபோன்று தொழிலாளர் கட்சியில் போட்டியிடும் காதர் மஸ்தானுக்கும் லைகா நிறுவனத் தலைவர் அல்லிராஜா சுபாஸ்கரன் பணம் வழங்கியுள்ளார். இப்படி அவர் எவ்வளவு பணம் வழங்கினார் என்பதை அவர் உடன் வெளிப்படுத்த தயாரா என்று வினவுகின்றோம்.

ரஞ்சன் ராமநாயக்கவும், ரவிகுமுதேஷும் ஐக்கிய ஜனநாயக குரல் கட்சிக்கும் சுபாஸ்கரனுக்கு எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என்று கூறுகின்றார்கள். ஆனால் கட்சியின் செயலாளராக ஜெயசீலன் என்பவரே உள்ளார். அவர்தான் லைக்கா நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியாகவும் உள்ளார். அதனைவிடவும் சிங்கப்பூரில் செயற்படும் நிறுவனத்துக்கும் அவரே அதிகாரியாக உள்ளார். ஞானம் அறக்கட்டளையிலும் அவரே அதிகாரியாகவுள்ளார்.

ஒன்பது மாவட்டங்களில் போட்டியிடும் கட்சியின் வேட்பாளர்கள் 180 பேர் வரையிலானவர்களுக்கு சுபாஸ்கரன் பணம் வழங்கியுள்ளார். அவர் முதற்கட்டமாக தலா பத்து இலட்சம் வழங்கியுள்ளார். அவருடைய பணம் வெள்ளையா கறுப்பா என்பதையும் தேடிப்பார்த்தோம்.

சுபாஸ்கரன் பிரித்தானியாவில் கட்சிகளுக்கு இலஞ்சமாக பணம் வழங்கிய குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ளார். பிரான்ஸில் அவருக்கு எதிராக தீர்ப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் அவரின் நிறுவனங்களுக்கு எதிரான விசாரணைகளை புலனாய்வுப்பிரிவினர் முன்னெடுக்கின்றார்கள். ஆஸ்திரேலியாவில் பயனாளர்களின் முறைப்பாட்டால் அவருக்கு 600 மில்லியன் டொலர்கள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அவ்விதமான ஒரு நபர் இலங்கையில் வந்து எதற்காக வேட்பாளர்களுக்கு பணம் வழங்குகின்றார்? அரசியல் கட்சியை நடத்துகின்றார் என்று கேட்கிறார் பிரசன்ன அதிகாரி.

நல்லவேளையாக வடக்கு கிழக்கில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் கொடுக்கப்பட்ட கோடிக்கணக்கான பணத்தைப்பற்றி பிரசன்ன அதிகாரி எதுவும் வாய் திறக்கவில்லை என்று இங்கு பலர் நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள் என்பது மட்டும் நிச்சயம். ஆனால் விரைவில் அந்த விவரங்களையும் கையில் தூக்கியபடி அவர்களையும் விரட்ட கொழும்பில் பலர் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதில் நாமக்கொரு மகிழ்ச்சி.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## பொதுத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனு மீதான விசாரணை இன்று உயர்நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது. குறித்த விடயம் சம்பந்தமாக தேர்தல்கள் ஆணைக்குழு தனது அவதானிப்பு அறிக்கையை சட்டமா அதிபர் திணைக்களத்திற்குக் கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ளது. இதனை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க உறுதிப்படுத்தினார். சட்டமா அதிபர் இது தொடர்பாகத் ஆளும் தரப்பின் நிலைப்பாட்டை உயர் நீதிமன்றல் தனது இன்று வெளிப்படுத்தவுள்ளார்.

நவம்பர் 14 நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் அரசமைப்புக்கு எதிரானதென உத்தரவிடுமாறு கோரி சிவில் செயற்பாட்டாளரும் நாம் ஸ்ரீலங்கா தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளருமான எச்.எம்.பிரியந்த ஹேரத் கடந்த வாரம் இந்த மனுவை உயர் நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு சட்டத்தின் 10 ஆவது விதந்துரைக்கமைய வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்காக ஒக்டோபர் 4 முதல் ஒக்டோபர் 11 வரையான காலப்பகுதி அறிவிக்கப்பட்டுள்ளபோதும், தேர்தல் சட்டத்தின்படி வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள்முதல் ஐந்து வாரங்களுக்குக் குறையாத,காலப்பகுதிக்குள் தேர்தலுக்கான நாள் குறிக்கப்படவில்லை என்பதைத்தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுதி தினமான ஒக்டோபர் 11 முதல் ஐந்து வார காலம் என்பது நவம்பர் 15 முடிவடைகிற போதும் நவம்பர் 14 தேர்தல் அறிவிக்கப்பட்டிருப்பது அரசமைப்பு மீறல் என்று மனுதாரர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதுதொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு அறிவுறுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பயனற்றுப் போனதால், மக்களின் இறைமையும் நாட்டின் அரசமைப்பும் கவனத்திற்கொள்ளப்படவில்லையென தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டமைக்கு எதிரான உரிய உத்தரவை பிறப்பிக்குமாறு நீதிமன்றில் மேலும் கோரியிருக்கிறார்.

மனுதாரர் சுட்டிக்காட்டியிருப்பதை ஏற்றுக்கொண்டு, நவம்பர் 15 முழுமதி அரச விடுமுறை நாள் என்பதால் அடுத்த நாள் நவம்பர் 16 தேர்தலை நடத்த ஆளும்தரப்பு இன்று இணக்கத்துக்கு வரலாம் என்று உள்ளகத் தகவல்கள் தெதரிவிக்கின்றன.

## விகாரைகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்தார்.

அக்குரகொடவில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் நேற்று இராணுவ ஊடகப் பிரிவு சார்பில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

விகாரைகளின் பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்டுள்ள முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களப் படையினர் நீக்கப்படவில்லை. விகாரைகளின் பாதுகாப்புக்காக மட்டும் 364 பேரும், கட்டுமானப் பணிக்காக 1,220 பேரும் பணிபுரிகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் அறுகம்பே மற்றும் பொத்துவில் பிரதேசங்களைச் சேர்ந்த திகவாபி ஆலயத்திற்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படவில்லை. விசேட பாதுகாப்பு தேவைப்படும் ஆலயங்கள் புத்தசாசன அமைச்சின் ஊடாக கோரிக்கை விடுக்கவேண்டும். கோரிக்கையின்படி, பாதுகாப்பு அமைச்சகத்தின் ஒப்புதலின் பேரில் பாதுகாப்புப் பணியாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் வழக்கமான படைகள் குறைக்கப்படவில்லை. இந்த ஆண்டு வழக்கமான படைக்கு 3000 வீரர்களும், தொண்டர் படைக்கு 4000 வீரர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## தற்காலிக நடவடிக்கையாக

# வாகன இலக்கத் தகடு விநியோகம் நிறுத்தம்

வாகன இலக்கத் தகடு விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இலக்கத்தகடுகளை அச்சடிக்கும் நிறுவனத்திற்கு பணம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உரிய கொடுப்பனவுகளுக்கு உடனடியாக அமைச்சரவையின் அனுமதி பெறப்படவுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரத்திற்குள் இதற்கான பணிகள் நிறைவடையும் என எதிர்பார்ப்பதாகவும் வாகன உரிமையாளர்களுக்கு வாகன இலக்கத் தகடு வழங்காமை தொடர்பில் கடிதமொன்று வழங்கப்படுவதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

குறித்த காலப்பகுதியில் தாளில் அச்சிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட வாகன இலக்கத்தை காட்சிப்படுத்துவதற்கு வாகன உரிமையாளர்களுக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு தரப்படும்

## நுவரெலியாவில் ஜனாதிபதி உறுதிமொழி

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்தார்.

நுவரெலியாவில் நேற்று நடந்த தேர்தல் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலின்போது தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றினார்கள். மே தினக் கூட்டத்துக்கு கொட்டகலைக்கு வந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளம் வழங்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி கூறினார். ஆனால் இன்னமும் அந்த சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. அவர் வீட்டுக்கும் சென்றுவிட்டார்.

தோட்டத்தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்கு நாம் நிச்சயம் நடவடிக்கை எடுப்போம். அதேபோல அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படும். மக்கள் எந்நாளும் அரசாங்க நிவாரணங்களை நம்பி வாழமுடியாது. மக்கள் சுயமாக எழுந்து நிற்ககூடிய வகையில் பொருளாதார சூழ்நிலையை நாம் உருவாக்குவோம்.

ஜனாதிபதி தேர்தலின்போது நுவரெலியா மாவட்ட மக்களை தேடி அடிக்கடி வந்தவர்கள், தற்போது கொழும்பிலேயே முடங்கியுள்ளனர். அதுதான் அவர்களின் அரசியல். ஆனால் நாம் என்றும் மக்களுக்காக களத்தில் நிற்போம். மக்களுக்கான அரசியலை முன்னெடுப்போம்

அத்துடன், 2025 வரவு - செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் எனவும் அவர் கூறினார். நுவரெலியாவில் இனி அரசியல் சண்டிதனங்களுக்கு இடமில்லை. மக்களை அடக்கி ஆளும் நிலையும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தேர்தலின்போது நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் மக்களின் வாக்குகளை குறிவைத்து கட்சிகளின் தலைவர்கள் அடிக்கடி நுவரெலியா வந்தார்கள். தற்போது வருகின்றார்களா? இல்லை. ஏனெனில் அவர்கள் கொழும்பில் போட்டியிடுகின்றனர். கொழும்புக்கு வெளியில் வரமாட்டார்கள். ஆனால் நாம் அப்படியானவர்கள் அல்லர். வென்றாலும், தோற்றாலும் நாம் மக்களுக்காக நிச்சயம் வருவோம். அரசியலுக்காக நாம் மக்களை பிரித்தாள மாட்டோம்.

இந்நாட்டை ஆண்டவர்கள் நாட்டை நாசமாக்கியுள்ளனர். நுவரெலியாவில் வறுமை நிலை நிலவுகின்றது. சுகாதாரம், கல்வி உள்ளிட்ட விடயங்களில் பின்தங்கிய நிலை காணப்படுகின்றது. பெருந்தோட்ட மக்களுக்கு தமக்கென நிலம் இல்லை. நிம்மதியான வாழ்வு இல்லை. ஆனால் ஆட்சியாளர்கள் சொகுசாக வாழ்ந்துவந்தனர். எனினும், நுவரெலியாவில் இருந்து நஞ்சற்ற காய்கறிகளை ஒவ்வொரு நாளும் தருவித்து உண்ணும் அளவிற்கு சொகுசாக வாழ்ந்து வந்துள்ளனர். அதை நான் நிறுத்தியுள்ளேன். கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது மக்கள் இணைந்து மக்களுக்கான ஆளும்தரப்பை உருவாக்கியுள்ளனர். எனவே, மக்களுக்குரிய சேவைகள் நாம் உரிய வகையில் முன்னெடுப்போம்.

நுவரெலியாவில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த முடியும். அதற்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அரசியல்வாதிகளின் வீண் செலவுகள் குறைக்கப்பட்டு, மக்கள் பணம் சேமிக்கப்படும். இது கொள்கை ரீதியிலான முடிவு. முன்னாள் ஜனாதிபதிகளைப் பழிவாங்கும் நடவடிக்கை அல்ல - என்றார்.

# அஸ்வெசுமன குறித்து ஆராய 10 பேர் கொண்ட குழு நியமனம்

*ரணிலால் அறிமுகப்படுத்தப்பட்ட 'அஸ்வெசும' நலன்புரி உதவிக்கான பயனாளிகள் தெரிவில் இடம்பெற்ற அநீதிகளை ஆராய்ந்து உண்மையான பயனாளிகளைஉறுதிப்படுத்துவதற்காக 10 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. புத்தசாசன, மத மற்றும் பண்பாட்டு அலுவல்கள், தேசியஒருமைப்பாடு, சமூகபாதுகாப்பு மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன இந்தக் குழுவை நியமித்துள்ளார். அமைச்சர் விஜித ஹேரத்தின் பணிப்புரைக்கு அமைய இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.*

*'அஸ்வெசும' பயனாளிகள் தெரிவில் உண்மையில் பயனடைய வேண்டிய பயனாளிகளை அடையாளம் காணும் முறைமையொன்றை அமைத்தல், 'அஸ்வெசும' திட்டத்தின் கீழ் உண்மையில் பயனடைய வேண்டிய சமுர்த்தி பயனாளிகள் பாதிக்கப்பட்டதற்கான காரணங்களை ஆராய்தல், 'அஸ்வெசும' திட்டத்தில் சேர்க்கப்படக்கூடாத மற்றும் உண்மையில் சேர்க்கப்படவேண்டிய பயனாளிகளைத் தெரிவதற்கான அளவுகோல்களைத் தீர்மானித்தல் ஆகியவை இந்தப் 10 பேர் குழுவின் பொறுப்பாகும்.*

*சமுர்த்திப் பயனாளிகளாகப் பயனடைந்த மற்றும் நன்மைகளை இழந்த ஆனால் உண்மையில் நன்மைகளுக்கு தகுதியான பெருமளவானவர்கள் ஏற்கனவே நாடளாவிய ரீதியில் உள்ளனர் எனக் கிடைத்த முறைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் அரசுக் கட்சிக்கு வடக்கு மாகாணத்தில் மக்கள் 10 ஆசனங்களை வழங்கவேண்டும்

## கேட்கிறார் வேட்பாளர் பிரகாஷ்



இலங்கைத் தமிழரசுக் கட்சி கொலை காரர்களையும் கொள்;ளை காரர்களை விரட்டி அடித்து, வீடு சுத்தமாக்கப்பட்டுள்ளது; வீடு புனிதமடைந்துள்ளது. மக்களின் எதிர்பார்ப்புப் படி படித்த - ஆளுமையுடைய - இளைஞர்களை இந்தமுறை வேட்பாளர்களாக நிறுத்தி மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்துள்ளது.

ஆகவே, மக்களின் எதிர்பார்ப்பை கட்சிநிறைவுசெய்ததால்தமிழ்மக்கள் ஓரணியாகத்திரண்டுயாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டம் வன்னி தேர்தல் மாவட்டம் இரண்டிலும் சேர்த்து 10 ஆசனங்களைத் தமிழரசுக் கட்சிக்கு வழங்கி ஒரு தேசமாக நாம் தமிழ்த் தேசியத்;தைக் கோரி நிற்கின்றோம் என்;பதை சிங்கள தேசத்துக்கும் சர்வதேசத்துக்கும் ஒற்றுமையாக - ஓரணியாக - இடித்துரைக்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளரும் வலி.தெற்குப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளருமான தி.பிரகாஷ்.

சுன்னாகத்தில் பொதுமக்களைச்; சந்தித்;த அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு -

தமிழரசுக் கட்சி இளைஞர், யுவதிகளுக்கு நாடாளுமன்ற ஆசனம் வழங்குவதில்லை. இருந்த அதே பழையவர்கள்தான் இளைஞர்களுக்கு வழிவிடாமல் தொடர்ந்தும் நாடாளுமன்றில் இருக்கிறார்கள். இளம் தலைமைத்துவமுடைய ஆற்றலாளர்கள், தலைமைத்துவ பண்புகளைக் கட்சி வளர்ப்பதில்லை என்ற ஏக்கம் மக்கள் மத்தியில் இருந்ததை நாம் நன்கு அறிவோம். அதில் உண்மையும் இருந்தமையால் நாம் அது தொடர்பில் அலட்டிக்கொள்ளவில்லை. கட்சியில் உறுப்பினராக இருந்துகொண்டு பொதுவெளியில் அவற்றை விமர்சிப்பது நாகரிகமாகாது.

அதற்குக்காரணம்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பாக செயற்பட்டதால் அதில் கொலைகாறர்களும் கொள்ளையர்களும் விரும்பியோ விரும்பாமலோ நிரவியிருந்தார்கள். அதனால்தான் அவர்கள் புதியவர்களுக்கு வழிவிடவில்லை. ஆரம்பத்தில் ஓர் ஆசனம் கேட்டு வந்தவர்கள் காலப்போக்கில் மாவட்டத்தின் ஆசனம் குறைகின்றபோது இவர்கள் ஆசனஎண்ணிக்கைஅதிகரிக்கத்தொடங்கியமையே அதற்குக் காரணம். இப்பவும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்சியை உருவாக்கி, திரும்பவும்தாமே வேட்பாளர்களாக நிற்கின்றார்கள்.

இவர்கள், தாம் தமிழரசுக் கட்சியை விட்டுச் சென்றமைக்குக் காரணம் அங்கு ஜனநாயகம் இல்லை. அதனால்தான் வெளியேறினோம் என்பார்கள். ஆனால், மக்கள் கட்சி நிலைவரத்தை பார்த்தீர்களானால் தெரியும் அங்கு ஜனநாயகம் இருந்தமையால்தான் இவர்கள் கட்சியை விட்டு வெளியேறினார்கள் என்பது புலப்படும்.

புளொட் தலைவர் 2013 இல் மாகாணசபைத் தேர்தலுக்கு இரு ஆசனம் கேட்டார். தமிழரசுக் கட்சித் தலைமை வழங்கியது. இளைஞரான ஒருவரை நிறுத்தினார். நாமும் அதை வரவேற்றோம். பின்; 2015 இல் தனக்;கு நாடாளுமன்ற ஆசனம் கேட்டார். அதையும் தமிழரசுக் கட்சி விட்டுக்கொடுத்தது. பின் 2019 இல் இரண்டு நாடாளுமன்ற ஆசனம் கேட்டார் அதற்கும் 7 ஆசனமாகக் குறைக்கப்பட்ட பின்னரும் தமிழரசுக் கட்சி விட்டுக்கொடுத்தது. ரெலோவும் தமது கட்சி சார்பில் ஓர் இளைஞரை நிறுத்தப்போகிறோம் என்று ஆசனம் கேட்டது. தமிழரசுக் கட்சி அதற்;கும் விட்டுக்கொடுத்தது.

இவ்வாறு கூட்டமைப்பின் தலைமையாக இருந்த தமிழரசுக் கட்சித் தலைவர்கள் விட்டுக்கொடுத்துக்கொண்டே சென்றமையால் - அவர்கள் தமது கட்சி அரசியலை கனகச்சிதமாக வளர்த்துக்கொண்டே சென்றமையால் - தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களுக்கு கட்சிமீது விசனம் ஏற்படத் தொடங்கியது. 2018 உள்ளூஜுட்சி மன்றத் தேர்தலில் அடிபட்டு ஆசனங்களைப் பெற்று, தலைமைத்துவமற்ற அவர்கள் சபைநடத்திய விதம் தொடர்பில் மக்கள் வெறுப்படைந்தனர். 2023 சபை பங்கீட்டை மேலும் மேலும் கேட்டதன் காரணமாக சுமந்திரன், சிறிதரன் ஆகியோர் பொறுமையிழந்து நாம் தனித்தனிக் கட்சிகளாகப் போட்டியிடுவோம். வென்றதன் பிற்பாடு கூட்டமைப்பாக சேர்ந்தியங்குவோம். - என்றார்கள். இதற்கு உடன்படாமையால் அவர்கள் பிரிந்து சென்று தமிழரசுக் கட்சியில் ஜனநாயம் இல்லை என்கிறார்கள். இதனை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் கட்சி, கடந்த தேர்தலில் தோற்றவர்களுக்கு ஆசனம் வழங்குவதில்லை என்ற முடிவை எடுத்தது. தலைவர் மாவை ஐயாகூட அதற்கு சம்மதித்தார். அத்;தோடு புதிதாக மக்கள் விருப்பத்திற்கமைய இளைஞர், யுவதிகளை நிறுத்;துவது எனவும் கட்சி முடிவெடுத்தது. இதனால் விரக்தியுற்ற சிலர் பிறிம்பாக சென்று புது சுயேச்சைக் குழுவை உருவாக்கினர். ஆர்னோல்ட் மட்டும் யாழ்.தேர்தல் தொகுதியில் கடந்தமுறை போட்டியிட்டவர். அவர் இளைஞர் என்பதால் அவருக்கு இன்னொரு சந்தர்ப்பம் கட்சி வழங்கியது. சுமந்திரன், சிறிதரன், இளங்கோவனைத் தவிர அனைவரும் 50 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள். ஒட்டு மொத்த வேட்பாளர்களும் 60 வயதுக்கு உட்பட்டவர்கள்.

ஆகவே,நீங்கள்எதிர்பார்த்தமைபோன்றுஇளைஞர்களைபெரும்பான்மையாகக் கொண்ட ஒரே மக்கள் மத்தியில் அறியப்பட்ட கட்சி தமிழரசுக் கட்சிதான். அரச இயந்திரத்தால் தமிழர் ஒற்றுமையைக் குலைப்;பதற்காக புதுப்புது கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என்று இறக்கப்பட்டிருக்கலாம். அதன் உண்மைத் தன்மையை உணர்ந்து எமது மக்கள் அதனை முறியடித்து, ஒற்றுமையாக - ஓரணியாக தமிழ் தேசமாக எமது தேசியத்துக்குரிய உரிமையை தீர்மாணிக்கப்போவது உங்கள் வாக்குகள்தான். ஆகவே, அதனைத் தமிழரசுக் கட்சிக்கு வழங்கி வடக்கு மாகாணத்தில் 10 ஆசனங்களைப் பெற்று அதனை நிரூபித்து தமிழர்கள் தன்மானமுள்ளவர்கள் என்பதை உலகுக்குப் பறைசாற்றுவோம். - என்றார். (05)

# மன்னாரில் சட்ட விரோதமாகப்: பிடிக்கப்பட்டுள்ள கடலட்டைகளுடன் அறுவர் கடற்படையால் கைது



மன்னார் கிழக்கு கடற்கரைப் பகுதியான அரிப்பு பண்டாரவெளி கடற்பரப்பில் கடற்படை



யால் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 6 பேர் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர்.

இதன்போது ஒரு டிங்கி படகு, 227 கடலட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோத மீன்பிடி செயற்பாட்டை தடுக்கும் நோக்கில்இலங்கைகடற்படையானதுதீவைசுற்றியுள்ள கரையோர மற்றும் கடற்பரப்புகளில் வழக்கமான தேடுதல்நடவடிக்கைகளையும்ரோந்துபணிகளையும் மேற்கொண்டு வருகின்றன. இந்நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சிலாவத்துறை அரிப்பு மற்றும் நானாட்டான் பிரதேசங்களைச் சேர்ந்த 22 - 50 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

சந்தேகநபர்கள்கடலட்டைகள் மற்றும்இழுவைப் படகுகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் உதவி பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (05)

# அநுராதபுரத்தில் சில கிராமங்களில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

அநுராதபுரம், நொச்சியாகம பிரதேசத்தில் உள்ள சில கிராமங்களில் சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் கிராம மக்கள் அச்சத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அநுராதபுரம், நொச்சியாகம பிரதேசத்தில் உள்ள கிம்புல்பெட்டியாவ, குசும்புர, அம்பகஹவெள மற்றும் கல்கிரியாகம ஆகிய கிராமங்களிலேயே சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இந்த சிறுத்தைகளால் கிராமங்களில் உள்ள வீடுகளில் வளர்க்கப்படும் ஆடுகள், மாடுகள் மற்றும் ஏனைய கால்நடைகள் கொல்லப்பட்டதாகவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்குமாறு கிராம மக்கள் உயர் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

(05)



காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# நாட்டை ஆள அனுபவம் மட்டுமே தகுதியாகாது

அடுத்த நாடாளுமன்றத்திற்கு அனுபவமுள்ளவர்களை மக்கள் தெரிவு செய்யவேண்டும் என்று முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்து வருகின்றார். ஒவ்வொரு தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலும் அவர் இந்தக் கருத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றார். தற்பேதைய ஆளும் தரப்பினருக்கு நாட்டை ஆள்வதில் அனுபவமில்லை என்பதை மக்களிடம் நன்கு பதியவைத்து பயத்தை ஏற்படுத்தி அதில் குளிர்காய்வதற்கு அவர் முன்னிற்கிறார் என்பது நன்கு புரிகின்றது.

தற்போதைய ஆளும்தரப்பில் அனுபவமுள்ளஎவரும் இல்லாததன் காரணமாக, நாட்டை ஆட்சி செய்வதற்கு அனுபவமிக்க குழுவொன்று நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட வேண்டுமென கொழும்பில் நேற்று இளைஞர் குழுவொன்றுடன் இடம்பெற்ற சிநேகபூர்வ சந்திப்பொன்றிலும் ரணில் தெரிவித்திருக்கிறார்.

''தற்போதைய அரசாங்கம் எங்கே செல்கிறது என்பது தெரியாதுள்ளது. சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களிடத்திலேயே வாகனத்தை வழங்கவேண்டும். அனைத்துமட்டத்திலும் அனுபவமிக்க அரசியல் தலைமைகள் உருவாக்கப்படவேண்டும். ஆளும்தரப்புடன் நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முரண்படவில்லை. ஆனால், ஆட்சியாளர்களே என்னுடன் முரண்படுகின்றனர்.

40 கோடி ரூபா மதிப்பிலான முந்திரி, சீஸ் சாப்பிட்டதாகவும், 16 குடைகளைக் கொள்வனவு செய்ததாகவும் குற்றஞ்சாட்டுகின்றனர். என் மீது வழக்குத் தொடரப்போவதாகப் தலைமை அமைச்சர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். அதற்கு முன்னதாக அரச பணியாளர்களுக்கான வேதனத்தை அதிகரிக்க வேண்டும்'' என்று ரணில் தெரிவித்திருக்கிறார்.

இதற்கு முன்னர் ஒரு கூட்டத்தில், அனுபவமில்லாதவர்களிடம் நாட்டு நிர்வாகத்தை ஒப்படைத்தால், கொத்தலாவல பல்கலைக்கழக மாணவர்கள் பயணித்த பேருந்து விபத்துக்குள்ளாதைப் போன்று இந்த ஆளும் தரப்பும் கவிழ்ந்துவிடும் என்ற சாரப்பட அவர் கருத்துத் தெரிவித்திருந்தார். மற்றொரு சந்தர்ப்பத்தில் இந்த ஆளும் தரப்பு இப்படியேபோனால் மூன்று மாதங்கள்கூடத் தாக்குப்பிடிக்காது என்றும் அவர் எதிர்வுகூறினார். அற்கும் அனுபவம் இன்மையைத்தான் அவர் காரணமாகக் காட்டினார்.

அனுபவம் அற்றவர்கள் பொறுப்புக்கு வரும்போது தடுமாற்றம், வேகத்தடை, மந்த நிலை என்பன ஏற்படுவது இயல்புதான். அவர்கள் நின்று நிதானித்து செய்யவேண்டியவைகளைப் புரிந்துகொண்டு வேகம் எடுப்பதற்கு சிறிது காலம் செல்லக்கூடும் என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதுதான். அந்தக் காலப் பகுதிக்குள் அவர்கள் தவறு செய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டியதும் நேர்த்தியான நிர்வாகத்தை அவர்கள் செய்யவேண்டியவைகள் குறித்த ஆலோசனைகளை வழங்குவது–மே நல்ல அரசியல் தலைவர்கள் செய்யக்கூடியது.

ரணில் அதற்குப் பதிலாக அனுபவம் அற்றவர்கள் எப்போது கவிழ்ந்துகொட்டுவார்கள் தன்னை எப்போது பதவிக்கு அழைத்து வருவார்கள் என்று காத்திருப்பதைப் போன்று செயற்படுகின்றார். இது அனுபவமுள்ள ஒரு மூத்த தலைவருக்கு அழகல்ல. அதுவும்போக கடந்த 75 ஆண்டுகளில் அனுபவம் உள்ளவர்கள் மூலமே இலங்கை மாறி மாறி ஆளப்பட்டு வந்தது. ஆனாலும் என்ன நடந்தது? அனுபவம் உள்ளவர்கள் அனைவரும் சேர்ந்துதான், கொத்தலாவலை பல்கலைக்கழகப் பேருந்தைப் போன்று பொருளாதாரத்தை கவிழ்த்தார்கள். மக்களை நடுத்தெருவில் உணவுக்கும் எரிபொருளுக்கும் அலையவிட்டார்கள்.

அதிலிருந்து வெளிவருவதற்கு அனுபவம் வாய்ந்தவரான ரணில் விக்கிரமசிங்க செய்யதது எல்லாம், உலகில் வேறு எந்தவொரு நாட்டுத் தலைவரும் செய்யத் துணியாத வகையில் மக்களின் மீது அத்தனை சுமைகளையும் ஏற்றிச் சுமக்க வைத்ததுதான். தான் உள்ளிட்ட அனுபவம் வாய்ந்த தலைவர்கள் விட்ட தவறுக்கான அனைத்துத் தண்டனைகளையும் தனது அனுபவத்தைப் பயன்படுத்தி மக்கள் மீது சுமத்தினார் ரணில்.

இலங்கை இப்படிக் கெட்டழிந்து சீரழிவதற்கும், மக்களுக்கிடையே இன, மதக் குரோதங்களும் முரண்பாடுகளும் போரும் ஏற்படுவதற்கும் இந்த அனுபவம் வாய்ந்த தலைவர்களே கடந்த காலங்களில் காரணமாக இருந்தார்கள். மனிதாபிமானமற்ற, குற்றங்கள் நிறைந்த போர் ஒன்றை நடத்தினார்கள். ஆயிரம் பல்லாயிரம் லட்சம் என்று மக்களை ஈவு இரக்கமின்றிக் கொன்று குவித்தார்கள். இவற்றையெல்லாம் அனுபவம் மிக்க தலைவர்களே செய்தார்கள் என்பதை ரணில் விக்கிரமசிங்க மறந்துவிடக்கூடாது. இலங்கையை அழித்தவர்கள் அரசியலிலும் நாட்டு நிர்வாகத்திலும் அனுபவம் மிக்க தலைவர்களே.

அப்படிப்பட்ட அனுபவம்மிக்க தலைவர்களில் ஒருவரான ரணில் விக்கிரமசிங்க மீண்டும் இலங்கையை அனுபவம்மிக்கவர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்பதில் எந்த நியாயமும் இல்லை. அனுபவம் மிக்கவர்கள் ஒழுங்காக நிர்வகிக்கவில்லை என்பதைப் போலவே அனுபவம் அற்றவர்கள் சிறப்பாக நிர்வகிக்கவும்கூடும். அதற்கான வாய்ப்பை வழங்குவதே சரியானது.


# ஈரான் –சவுதி செங்கடலில் கூட்டு இராணுவப் பயிற்சி

## மத்திய கிழக்கில் கைகோர்த்த பரம எதிரிகள்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

(2023 ஆம் ஆண்டு இரண்டு நாடுகளுக்கும் இடையே சீனாவால் சமரசம் ஏற்படுத்தப்பட்டது. இப்படிப்பட்ட நிலையில்தான் செங்கடலில் சவூதி அரேபியாவுடன் சேர்ந்து கூட்டு ராணுவப் பயிற்சி நடத்த ஈரான் திட்டமிட்டுள்ளது. இது இரண்டு நாடுகள் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது)

செங்கடலில் சவூதி அரேபியாவுடன் சேர்ந்து கூட்டு இராணுவப் பயிற்சி நடத்த ஈரான் திட்டமிட்டுள்ளது. இது இரண்டு நாடுகள் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



### சீனாவின் சமரச வெற்றி:

2023 ஆம் ஆண்டு இரண்டு நாடுகளுக்கும் இடையே சீனாவால் சமரசம் ஏற்படுத்தப்பட்டது. இப்படிப்பட்ட நிலையில்தான் செங்கடலில் சவூதி அரேபியாவுடன் சேர்ந்து கூட்டு ராணுவப் பயிற்சி நடத்த ஈரான் திட்டமிட்டுள்ளது. இது இரண்டு நாடுகள் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது இஸ்ரேலை எதிர்த்து நிற்கும் ஈரானுக்கு ஆதரவாக பல அரபு நாடுகள் உள்ளன. மத்திய கிழக்கில் இத்தகைய திடீர் மாற்றத்தை இஸ்ரேல் அவதானமாக உற்று கவனித்து பார்க்கிறது.

குறிப்பாக லெபனான் மற்றும் காசாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகளால் இந்த மொத்தப் பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது இஸ்ரேலுக்கு பெரிய அளவில் நெருக்கடியை கொடுக்கும். மத்திய கிழக்கு நாடுகளில் சீனா மேற்கொண்ட மாற்றத்தால் தற்போது இஸ்ரேல், அமெரிக்கா பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகி இருக்கின்றன என்பதும் உண்மையே. முக்கியமாக ஈரான்–சவுதி ஒன்று சேர்ந்தது இஸ்ரேல், அமெரிக்காவை ஆச்சரியத்திக்கு உள்ளாகியுள்ளது.







நீண்ட கால பரம வைரிகளான ஈரான் மற்றும்–சவுதி அரேபியா இரண்டு நாடுகளும் தங்கள் உறவை புதுப்பிப்பதாக அறிவித்து உள்ளமையால், சீனா மேற்கொண்ட பேச்சு காரணமாக இரண்டு நாடுகளும் தற்போது கைகோர்க்க முடிவுசெய்துள்ளன.

### அரபுலக உறவு மேம்படுமா ?

பல்வேறு விஷயங்களில் இரண்டு நாடுகளும் தீவிரமாக மோதி வந்தன. இரண்டு நாடுகளுக்கும் இடையில் வரலாற்று ரீதியாக மோதல்கள் பல நிலவி வருகின்றன.

ஈரான் என்பது ஷியா பிரிவு இஸ்லாமியர்கள் அதிகம் இருக்கும் நாடு ஆகும். சவுதி அரேபியா என்பது சுனி பிரிவு முஸ்லீம் அதிகம் இருக்கும் நாடு ஆகும்.

இதன் காரணமாக இரண்டு நாடுகளும் பல்வேறு விஷயங்களில் கடுமையாக மோதி வந்தன. முக்கியமாக மத்திய கிழக்கில் நடக்கும் பல்வேறு போர்களில் இரண்டு நாடுகளும் எதிர் எதிர் துருவங்களில் இருக்கின்றன.

யேமனில் நடக்கும் போரில் ஹவுதி போராளிகளை ஈரான் ஆதரிக்கிறது. அதேசமயம் அந்நாட்டு அரசு மற்றும் இராணுவத்தை சவுதி அரேபியா ஆதரிக்கிறது. இது போன்ற பல போர்களில் இரண்டு நாடுகளும் எதிர் எதிர் திசையில் இருந்து திரை மறைவு போர் செய்து கொண்டு இருக்கின்றன.

அமெரிக்கா இந்த போரில் இத்தனை காலம் குளிர் காய்ந்து கொண்டு இருந்தது. மத்திய கிழக்கில் பதற்றம் நிலவுவதையும், அவர்களின் எண்ணெய் வளங்களைபெறுவதையும் அமெரிக்கா குறிக்கோளாக கொண்டு செயல்பட்டுக் கொண்டு இருந்தது.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# ஈரான் –சவுதி செங்கடலில் கூட்டு இராணுவப் பயிற்சி

4ம் பக்க தொடர்ச்சி...........

இதேவேளை உளவு ஆவணங்கள் கசிந்து, ஈரானை மொத்தமாக அழித்திட இஸ்ரேல் போட்டுள்ள திட்டம் உலகிற்கு



தெரிய வந்துள்ளது.

அமெரிக்கா குளிர் காய்ந்து கொண்டு இருந்த தீயில் சீனா தண்ணீரை ஊற்றி கடந்த மார்ச் மாதம் அணைத்தது. பல ஆண்டுகளாக மோதலில் இருந்த ஈரான் - சவுதி அரேபியா தற்போது இரண்டு நாட்டு உறவை புதுப்பிக்க முடிவு செய்துள்ளன.

கடந்த ஏழு வருடங்களுக்கு முன் இரண்டு நாடுகளும் அதிகாரபூர்வமாக தங்கள் உறவை முறித்துக்கொண்டன. சவுதி அரேபியா மூலம் ஷியா தலைவர் நிமிர் அல் நிமிர் என்பவர் கொலை செய்யப்பட்டார். இவருக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனைக்கு எதிராக ஈரானில் இருந்த சவுதி அரேபியா ராஜாங்க ஊழியர்கள் தாக்கப்பட்டனர். இந்த மோதலால் இரண்டுநாடுகளும்அதிகாரபூர்வமாக உறவை முறித்துக்கொண்டன.

இந்தநிலையில்இவர்களுக்குஇடையிலான மோதல் என்பது சவுதி அரேபியாவில் ராஜாங்க ரீதியாக பெரிய அளவில் பதற்றத்தை ஏற்படுத்தியது. இரண்டு நாடுகளும் பல்வேறு திரை மறைவு போர்களில் ஈடுபடும் நிலை ஏற்பட்டது.

சீனா இவர்களுக்கு இடையில் மத்தியஸ்த பேச்சு நடத்தியது. 2023ஆம் ஆண்டு இரண்டு நாடுகளுக்கும் இடையே சீனாவால் சமரசம் ஏற்படுத்தப்பட்டது. இந்த நிலையில்தான் செங்கடலில் சவூதி அரேபியாவுடன் சேர்ந்து கூட்டு இராணுவப் பயிற்சி நடத்த ஈரான் திட்டமிட்டுள்ளது. இது இரண்டு நாடுகள் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# மோட்டார் சைக்கிள் – லொறி மோதி விபத்து: ஒருவர் சாவு

ரிதிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருணாகல் - கெப்பிட்டிகல வீதியில் கரந்தகொல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார் என ரிதிகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றின் பின்புறத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றுமோதியதில்இந்தவிபத்துஏற்பட்டுள்ளது.

விபத்தின்போது மோட்டார் சைக்கிளின் செலுத்துநர் படுகாயமடைந்து குருணாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் குருணாகல் அம்பகொட பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடையவர் ஆவார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் ரிதிகம பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)

# 22 பிடி ஆணைகளுக்கு உரியவர் கைதாகினார்

கந்தானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கந்தேவத்த பிரதேசத்தில் பல்வேறு குற்றங்கள் தொடர்பில் நீதிமன்றங்களினால் 22 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபரொருவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என கந்தானை பொலிஸார் தெரிவித்தனர். கந்தானை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம், மதுரங்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

திருட்டு உள்ளிட்ட பல்வேறு குற்றங்கள் தொடர்பில் சந்தேக நபருக்கு எதிராக புத்தளம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய நீதிமன்றங்களால் 22 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# 6 கிலோ கேரள கஞ்சாவுடன் அநுராதபுரத்தில் ஒருவர் கைது

அநுராதபுரம், தலாவ பிரதேசத்தில் கேரள கஞ்சாவுடன் சந்தேக நபரொருவர் சனிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அநுராதபுரம், நொச்சியாகம பிரதேசத்தில் வசிக்கும் 37 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 06 கிலோ 150 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக தலாவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.(05)

# பணம், தங்க நகைகள் திருடிய 4 யுவதிகள் ஹட்டனில் கைது

ஹற்றன் நகரில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய யுவதிகள் நால்வரை கைது செய்து விசாரணைகள் செய்தபோது, அவர்கள் பொதுமக்களிடமிருந்து பணம் மற்றும் தங்க நகைகள் போன்வற்றை திருடியுள்ளனர் என தெரிய வந்துள்ளது.

ஹற்றன் நகரை சூழவுள்ள பகுதிகளில் இருந்து ஹற்றன் நகருக்கு பொருள்களை வாங்கச் செல்பவர்களிடமிருந்து இந்த யுவதிகள் பணம் மற்றும் பொருள்கள் பலவற்றை திருடியுள்ளனர்.

ஹற்றன் நகரில் ஒருவரின் கழுத்தில் உள்ள தங்கச்சங்கிலியை பறிக்க முற்படுவதாக சந்தேகித்து சிவில் உடையில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பெண்ணொருவரை கைது செய்து விசாரித்துள்ளார்.

அந்த விசாரணைகளின்போது நான்கு யுவதிகள் இத்திருட்டுமுயற்சிகளில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் தெரிய வந்ததையடுத்து, அந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நான்கு யுவதிகளிடமிருந்து 2 லட்சத்து 55 ஆயிரம் ரூபா பணமும் தங்க நகைகளும் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் 21 - 26 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், இவர்கள் வென்னப்புவ மற்றும் கொழும்பு பிரதேசத்தில் வசிப்பவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல இடங்களிலும் திருடிவந்த நிலையில் கைது செய்யப்பட்ட இந்த சந்தேக நபர்களை ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (05)



# மேட்டுக்குடி அரசியலுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர் திகாம்பரம் – ஹக்கீம் புகழாரம்



தமிழ் முற்போக்கு கூட்டணி மும்மூர்த்திகளில் ஒருவரான திகாம்பரம் மேட்டுக்குடி அரசியலுக்குச் சிம்ம சொப்பனமாயக விளங்கியதோடு கிடைத்ததை சரியாக பயன்படுத்திக் குறுகிய காலத்தில் மலையக மக்களுக்குச் சிறப்பான சேவையாற்றியுள்ளார் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஹற்றனில் சனிக்கிழமை நடைபெற்ற திகாம்பரத்தின் 'மலையக 200 - திகாம்பரம் 20' நாடாளுமன்ற உரைகள் நூல் வெளியீட்டு விழாவில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

நண்பர்கள் மனோ, திகா, இராதா ஆகியோர் சமூக சார்ந்த பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதில் திறமை வாய்ந்தவர்கள் என்பதை அனுபவத்தில் கண்டுள்ளேன்.

திகாவுக்கு கோபம் வரும் என்றாலும் அவரது கோபத்தில் நியாயமும் நேர்மையும் இருக்கும். அத்தோடு குறுகிய காலத்தில் அவரது அரசியல் வளர்ச்சியின் ஊடாக மலையக சமூகம் பயன்பெற்றுள்ளது.

அதில் திகாவின் வகிபாகம் வரலாற்றில் மறக்க முடியாததாகும். அவர் சாதாரண மக்களின் இதயத் துடிப்பாக இருக்கின்றார்.

ஆட்சியில் இருப்போரின் அலட்சியப் போக்கு ஒருபுறம்: தோட்ட முதல்லைமாரின் கெடுபிடிகள் ஒருபுறம்: பிரித்தாளும் தந்திரங்கள் ஒருபுறம் இருந்தாலும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர்கள் மூவரின் ஒற்றுமையும், நம்பிக்கையும் வளர்ச்சிக்கு வழிகோலியுள்ளது.

சாதாரணமக்களுக்குசேவைசெய்வதாகப் படம் போட்டுக் காட்டும் அரசியல்வாதிகள் மத்தியில் திகாம்பரம் ஒரு சாதனையாளராக விளங்குகிறார். தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர்கள் தமக்குக் கிடைத்த மக்கள் ஆணையைப் பயன்படுத்தி சமூகத்துக்கு முழுமையான பங்களிப்பை செய்து வந்துள்ளார்கள்.

அரசியலில்திகாம்பரம்இருபதுஆண்டுகள் சாதித்திருந்தாலும் அவர் இன்னும் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கின்றது. அதற்கு சவால்களை எதிர்கொண்டு முறியடிக்கக் கூடிய உறுதியான மனம் வேண்டும். மலையக மக்களின் மேலான வாழ்வுக்கு முஸ்லிம் சமூகத்தின் ஆதரவு என்றும் கிடைக்கும். - என்றார்.




# தனமல்வில - வெல்லவாய வீதியில் கோர விபத்து

## இருவர் காயம்







தனமல்வில - வெல்லவாய வீதியில் கிவுல்ஆர பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீதியில் பயணித்த லொறி ஒன்றின் சக்கரமொன்றில் காற்று வெளியேறியதால் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது லொறியில் பயணித்த இருவர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## வன்முறைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுபடுவோம்' எனும் தொனிப்பொருளிலும் 18 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்களுக்கான தெளிவூட்டும் நிகழ்வும் வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நேற்று நடைபெற்றது. அதன் பின்னர், செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் இருந்த தேர்தல் நிலவரத்தையும் தற்போது இருக்கின்றநிலவரத்தினையும்பார்க்கும்போது ஜனநாயகத்தை மதிக்கின்ற வன்முறைகள் அற்ற ஒரு சமாதானமான தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணையும் ஒரு கலாசாரம் உருவாக்கப்பட்டுக்கொண்டிருப்பதை அவதானிக்கின்றோம்.அதற்கு உதாரணமாக கடந்த ஜனாதிபதித் தேர்தலை குறிப்பிடலாம். அதேபோல இந்த பொதுத்தேர்தலிலும் இதுவரை பெருமளவிலான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் எவையும் பதியப்படவில்லை.

சட்டவிரோத தேர்தல் பிரசாரம் தொடர்பான முறைப்பாடுகளே அதிகளவில் கிடைப்பதை அவதானிக்க முடிகிறது. இதேவேளை பிரசார நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்கள் பெரும் பங்கினை வழங்குகின்றன. இவற்றை நாம் கண்காணிக்கும்போது அபேட்சகர்களுக்கு எதிரான சேறுபூசக்கூடிய இழிவுபடுத்தக்கூடிய போலிப்பிரசாரங்கள், நாளுக்கு நாள் அதிகரிப்பதனையும் அவதானிக்க முடிகிறது.

எனவே, அனைத்து அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியவர்களையும் வரவழைத்து அமைதியான தேர்தலுக்காக ஒத்துழைப்போம் என்ற வகையில் சத்தியபிரமானம் ஒன்றை பெறுகின்றோம்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெறவேண்டும்என்றால் நிச்சயமாக அது வன்முறையற்றதேர்தலாக இருக்கவேண்டும். வன்முறையற்ற தேர்தலுக்காக அனைத்து அரசியல் கட்சிகளின் அபேட்சகர்களும் ஆதரவாளர்களும் ஒன்றிணையவேண்டும் என கபே அமைப்பு கேட்டுக்கொள்கிறது என்றார்.

## சூரசம்ஹாரத்தைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் அறிக்கையை வடிவமைத்துள்ளன. பன்னிரு அம்சதிட்டத்துடன் அரசியல் ஏற்பாட்டு வாழ்வியல் முன்னேற்ற முன்மொழிவுகள் அடங்களாலான விரிவான இந்தத் தேர்தல் அறிக்கை நேற்று யாழ். மாவட்டம் கீரிமலையிலும் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானிலும் ஒரே நேரத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

தமிழர் பிரச்சனைக்கு இணைந்த வட கிழக்கில் சமஷ்டி தீர்வு, இறுதி யுத்த மக்கள் அழிவிற்கு பரிகார நீதி, காணமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி விசாரணை, அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, தமிழர் மரபுரிமைகள் மாற்றம் செய்யப்படுவதல் தடுத்தல், திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுத்துதல், காணி அபகரிப்பை நிறுத்துதல், ஊழலை சகல தளங்களிலும் ஒழித்தல், தமிழர் பிறப்புவீத்தை உயர்த்துதல், மது போதையிலிருந்து தமிழ் இளையோரை மீட்டல் ஆகியவை இந்தப் பன்னிரு அம்சத் திட்டத்தில் அடங்குகின்றன.

தேர்தல் அறிக்கையை வெளியிட்டு வைத்து உரையாற்றிய கலாநிதி தேவானந்த் மேலும் தெரிவித்ததாவது:

இப்போது கந்தசஷ்டி விரதம் தொடங்கியிருக்கிறது. இந்த விரதத்தினுடைய நிறைவிலே சூரனை சங்காரம் செய்ய இருக்கின்றோம். இந்தத் தேர்தலும் ஒரு சங்காரம்தான். யாரைச் சங்காரம் செய்யப் போகின்றோம்? எங்களை அல்லல்படுத்தும் அடங்கா முனிகளைச் சங்காரம் செய்யவேண்டும். பிள்ளைகள் தின்ற புளக்கடை முனிகளை சங்காரம் செய்யவேண்டும். நீங்கள் மீளக்குடியமர்ந்து வரும் இந்தநிலையில் உங்களைச்சுற்றியுள்ள கொள்ளிவாய்ப் பேய்களையும் குறளைப் பேய்களையும் பெண்களைத் தொடரும் பிரமராட்சசர்களையும் துரத்தவேண்டும்.

மக்களே! உங்களிடம் கேட்டுக்கொள்வது 'பார் பெர்மிட்டுக்கள்' ஊடாக உங்களுக்குச் சாராயக் கடைகளைத் தந்த இந்தச் சண்டாளர்களும் தண்டியக்காரர்களும் இடிவிழுந்து ஓடடவேண்டும். உங்களுக்குத் துன்பத்தைத்தந்த அத்தனைபேரையும் நீங்கள் துரத்தவேண்டும். அதற்குக் கிடைத்திருக்கும் ஒரு நல்ல வாய்ப்பு இது. ஒரு விரல் புரட்சி; ஒற்றை விரலால் அவர்கள் எல்லோரையும் துரத்த முடியும்.

இந்தச் சண்டாளர்கள் எல்லோரையும் துரத்திவிட உங்களுக்கும் எங்களுக்கும் கிடைத்துள்ளநல்லதொருவாய்ப்புத்தான் இந்தத் தேர்தல். அந்த நோக்கத்தோடுதான் தமிழர் சம உரிமை இயக்கம் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளோம். நாங்கள் பரம்பரை பரம்பரையாகத் தமிழ் அரசுக் கட்சிக்குத்தான் வாக்களித்து வந்திருக்கின்றோம். ஆனால் இன்று எம் தலைமுறைக்கு மூத்தவர்கள்கூட இந்தத்தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களிப்பதற்குத் தயாராக இல்லை. அவர்கள் இனியும் மக்களை ஏமாற்ற அனுமதிக்கக்கூடாது என்கிற முடிவுக்கு மக்கள் இன்று வந்துவிட்டார்கள்.

ஏமாற்றுகின்ற இந்தக் கூட்டத்தை நாம் துரத்தவேண்டுமா இல்லையா? எங்களைப் பிடித்திருக்கின்ற இந்தக் கொள்ளிவாய்ப் பேய்களையும் குறளைப் பேய்களையும் எல்லோரையும் நாங்கள் துரத்துவோம். அவர்களைத் துரத்தியபின்னர் நீங்கள் உங்களுக்கு நன்கு தெரிந்த நல்லவர்களைத் தெரிவு செய்யவேண்டும். நல்லவர்களை எப்படித் தெரிவு செய்வது என்பதுதான் எங்கள் முன் உள்ள பெரிய பிரச்சினை.

தமிழர் சமஉரிமை இயக்கம் உங்களோடு சேர்ந்தது. உங்கள் பகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழகத்திலே பட்டம்பெற்ற ஒருபெண் வேட்பாளரை நாம் நிறுத்தியிருக்கின்றோம். அவர் உங்களுடையவர், உங்களோடுதான் இருக்கப்போகிறார். அவர் கொழும்புக்கு ஓடிவிடமாட்டார். நாடாளுமன்ற உறுப்பினராகியவுடன் இன்னொருஇடத்திற்குச் சென்று பல கோடிகள் செலவழித்து காணி வாங்கிவீடுகட்டமாட்டார். எனவே உங்களோடு இருந்து உங்கள் குறைநிறைகளுக்குத் தீர்வு காணக்கூடியவரைத்தெரிவுசெய்யவேண்டும் என்பதுதான் இப்போது உங்கள் முன் உள்ள மிக முக்கியமான பிரச்சினை.

அப்படிப்பட்டவர்களைநீங்கள்அடையாளம் கண்டுவிடாமல் ஊடகங்களும் இருட்டடிப்புச் செய்கின்றன. எல்லோரும் கட்சிகளைத்தான் முதன்மைப்படுத்துகிறார்கள். தேர்தல் திணைக்களம்கூட கட்சிகளுக்குத்தான் முன்னுரிமைவழங்குகின்றது. ஆனால், இந்தக் கட்சிகளால் தமிழ் மக்களுக்கு ஒரு பயனும் இல்லை. இதுவரை அவர்கள் சொல்லிய அரசியல் தீர்வை அவர்கள் பெற்றுத்தரவும் இல்லை. நாங்கள் 6 கார்களில் தொடரணியாகச் சென்று பரப்புரை செய்யவில்லை. அதற்கு எங்களிடம் நிதி வசதியும் இல்லை. இந்தப் பரப்புரைக்கேகூட நாங்கள் மோட்டார் சைக்கிளில்தான் வந்துள்ளோம். உங்களைப் போல, உங்களில் ஒருவராகத்தான் வந்துள்ளோம்.

கட்சிகளின் வேட்பாளர்கள் நோட்டீஸ் அடிப்பதற்கே 1-0 லட்சம் ரூபாயைச் செலவிடுகிறார்கள். அவர்களுக்கு எங்கிருந்து பணம் வந்தது? அல்லது இப்படிச் செலவழிக்கும் பணத்தை அவர்கள் எப்படித் திரும்பப் பெறுவார்கள்? உங்கள் கைகளில் அவர்கள் விலையுயர்ந்த பளபளப்பான துண்டுப்பிரசுரங்களைத் தரும்போது, உங்களுக்குஇதற்கெல்லாம்எங்கிருந்துபணம் வந்ததுஎன்றுகேளுங்கள். இல்லையென்றால் செலவிட்ட பணத்தை நீ எப்படித் திரும்பப் பெறப்போகிறாய் என்று கேளுங்கள். சிலர் அதற்குப் பரம்பரைச் சொத்தும் பணமும் இருக்கிறது, அதைச் செலவழிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப் பரம்பரைக்கு எப்படிச் சொத்து வந்தது? பரம்பரையே அரசியல்வாதிகளாக இருந்ததால்தான் அந்தப் பணம் வந்தது.

ஆக இப்படிப் பரம்பரை அரசியல்வாதிகள், பரம்பரைப் பணக்காரர்கள், திடீர்ப் பணக்காரர்கள், மோசடிக்காரர்கள், பார் பெர்மிட்காரர்கள் எல்லோரையும் தாண்டிப் புதியவர்கள்கட்சிகளுக்கூடாகஎப்படிவரமுடியும் என்றால் அது சுயேச்சைகளாகத் தேர்தலில் நிற்பதன் மூலம்தான் மக்களுக்கு நல்லது செய்ய முயல்பவர்கள் வரமுடியும். இதுதான் இப்போதுள்ள அரசியல் சூழல். கட்சிகள் நல்லவர்களுக்கோ, பணம்அற்றவர்களுக்கோ இடம்கொடுக்கமாட்டா.

ஒருவேளை சுயேச்சைகள் ஊடாக தமிழர்களுக்கு நல்லதொரு தலைமை கிடைத்துவிடக்கூடாது என்பதற்காக சுயேச்சைகளை அவதூறு செய்கிறார்கள் அல்லது போலிச் சுயேச்சைகளை உருவாக்குகிறார்கள். பின்னர் சுயேச்சைகள் எல்லாம் நேற்றுப் பெய்த மழைக்கு இன்று முளைத்த காளான்கள் என்கிறார்கள். நாங்கள் காளான்கள் அல்லர். தமிழ் அரசுக் கட்சி மாதிரியான ஆலமரத்தை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற பெரிய கூட்டணிகளை வாக்குப்போட்டுவாக்குப்போட்டுவளர்த்தவர்கள் நாங்கள். அந்த ஆலமரத்துக்குக் கீழே நிழலுக்கு ஒதுங்கியவர்கள், அது தந்த குளிர்ச்சியிலே சுகம் கண்டவர்கள் அதனை ஒவ்வொரு விழுதாக வெட்டி விழ்த்தினார்கள். கிளைகளை வெட்டி வீழ்த்தினர்கள். இன்று அடிமரத்தையேவெட்டிஅந்த ஆலமரத்தையே படப்பண்ணியிருக்கிறார்கள்.

அப்படி வீழ்த்தப்பட்ட ஆலமரம் இருந்த இடத்தில் இன்று முளைத்திருக்கும் காளான்கள்தான் தேசியம் பேசும் கட்சிகளின் இன்றைய வேட்பாளர்கள். வீழ்த்தப்பட்ட ஆலமரத்திற்குப் பக்கத்தில் நின்றிருந்த வன்னி மரம்தான் நாங்கள். பெரிய ஆலமரம் நின்றிருந்தபோது அதனருக்கில் இருந்த வன்னிமரம் உங்களின் கவனத்திற்கு வரவில்லை. இப்போது ஆலமரம் வீழ்த்தப்பட்டிருக்கிறது. வன்னி மரங்கள் வேகமாக வான் நோக்கி வளர்க்கின்றன. வன்னி மரம் என்பது இலேசானது அல்ல. அது எந்தவொரு காலநிலையிலும் தன்னை தகவமைத்து நிலைநிறுத்தி வாழக்கூடிய மரம். இதனால்தான் பாண்டவர்கள் அஞ்ஞானவாசத்திற்குப் போகும்போது தமது ஆயுதங்கள் எல்லாவற்றையும் வன்னிமரப் பொந்தினுள்ளே வைத்துவிட்டுப் போகிறார்கள். எல்லாக் காலச் சூழலையும் தாங்கிய அழியாது, எப்போதும் உயிர்ப்போடு இருக்கக்கூடியது வன்னிமரம் என்பதால்தான் அந்த மரத்திற்குள்ளே பாண்டவர்கள் தமது ஆயுதங்களை மறைத்து வைத்தார்கள்.

நாங்கள் வன்னிமரங்கள். எங்களிடம்தான் தமிழர் விடுதலைக்கான ஆயுதங்கள் மறைத்துக் கிடக்கின்றன. விடுதலைக்கான வேள்வியை இன்னும் சுமந்துகொண்டிருப்பவர்கள் நாம்தான். அப்படிப்பட்ட வன்னிமரங்களைத்தான் இந்தக் கட்சிகள் காளான்கள் என்கின்றன. அவர்களுக்குத்தெரியவில்லைவன்னிமரத்தின் கிழே காளான்கள் நெருங்கக்கூட முடியாது என்று. எங்களுடைய தேர்தல் அறிக்கையிலே, வடக்குகிழக்கு இணைந்ததமிழர் தாயகத்திலே சமஷ்டிதான் அரசியல் தீர்வு என்பதையும் அந்த வேணவாவை வென்றெடுப்பதற்காகப் போராடுவோம் என்பதையும் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றோம். அது தவிர மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்தும்நாம்கவனம்செலுத்தியிருக்கின்றோம். எமது தேர்தல் அறிக்கையிலே அவற்றுக்கு நாம்மிகவும்முன்னுரிமைகொடுத்துள்ளோம். உதாரணத்திற்கு தெல்லிப்பளையில் ஒரு முழுமையான மகப்பேற்று விடுதியைத் தொடங்குவதற்கான அத்திபாரத்தை நாம் போடுவோம் என்று சொல்லியிருக்கின்றோம்.

உங்களைப்போதைக்குள்ளேதள்ளிவிடத் துடிக்கும் மாயமான் கூட்டத்திற்கு மத்தியிலே உங்களுடைய கல்வி, சுகாதாரம், விவசாயம், பொருளாதாரம் குறித்துச் சிந்தித்துச் செயற்படவேண்டும் என்ற அவாவோடு, துடிப்போடு இருப்பவர்கள் நாங்கள் - என்றார்.

## இறக்குமதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான செயற்றிறன் அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் தகவலின்படி, -முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் வரியில்லா வாகன அனுமதிப்பத்திரத்தின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து பெற்றுள்ளனர்.

வரியில்லா வாகன அனுமதிப்பத்திரத்தை அனுமதிக்குமாறு ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தொடர்ந்து கோரிக்கை விடுத்ததுடன், எதிரணி உறுப்பினர் ஒருவர் வாகன அனுமதிப்பத்திரத்தை அனுமதிக்குமாறு முன்னாள் ஜனாதிபதியிடம் கோரும் காணொளியும் இப்போது இணையத்தில் பரவி வருகின்றது.

## தேமச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தினார். முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று கூறினாலும், இதுவரை குறித்த முறைமை மாற்றம் நிகழவில்லை. அவரது கட்சி, சின்னம், அணி மற்றும் அவர்களது சமூக வலைதள குழுமங்களிலேயே மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதுவரைஇருந்துவந்தபழையமுறைமையே தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மட்டக்குளியவில் நேற்று மக்களுடனான சந்திப்பொன்றுஐக்கிய மக்கள் கூட்டணியினது தலைவரான சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்றது. அதில் உரையாற்றிய சஜித் மேலும் தெரிவித்ததாவது;

ஆட்சிக்கு வந்ததும் மின் கட்டணத்தை குறைப்போம், எரிபொருள் விலையை குறைப்போம், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைப்போம், கடவுச்சீட்டுவரிசையைஒழிப்போம், வரியைக் குறைப்போம் என்று சொன்னார்கள், இவை எதுவும் நடக்கவில்லை.

பொருட்கள், அரிசி, தேங்காய் விலையை குறைக்க முடியாமல் தற்போது தேங்காய்க்கு வரிசைகள் கூட உருவாகியுள்ளது. அன்று எரிபொருள் விலை சூத்திரத்தை விமர்சித்து விட்டு, இன்று அதே விலை சூத்திரத்தைப் பயன்படுத்தி, உயர் வர்க்கம் பயன்படுத்தும் சுப்பர் டீசலின் விலையை மட்டும் குறைத்துள்ளனர். சாதாரண மக்கள் பயன்படுத்தும் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை.

இதெல்லாம் மக்களை ஏமாற்றும் கதைகள் ஆகும். ஆட்சிக்கு வந்த பிறகு வரியை குறைப்பதாக சொல்கிறார்களே தவிர குறைந்த பாடில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் இரண்டு சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்ற போதிலும் எதுவும் மாறவில்லை. உழைக்கும் வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும்ஜனாதிபதி, சர்வதேசநாணயநிதியத்தின் முன் மண்டியிட்டுள்ளார்.

அவரும் சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடத் தொடங்கியுள்ளார். தற்போதைய ஜனாதிபதி ஊடகங்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றார் என்றார்.

## ஜேவிபி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பனைஅபிவிருத்திச்சபையின்தலைவராக செல்வின் இரேனியஸ்சை கடந்த மாதம் அமைச்சர் விஜிதஹேரத் நியமித்தபோது பனை அபிவிருத்திச்சபைக்கு விடிவுகாலம் பிறந்திருப்பதாகவே நாம் நினைத்தோம். ஆனால், இருவார காலத்துக்குள்ளாகவே அவரது நியமனம் இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் முருங்கை மரம் ஏறும் வேதாளம் போலப் பொருத்தமற்ற ஒருவர் பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமன மாற்றத்தின் மூலம் பனை அபிவிருத்திச் சபையின் வளர்ச்சி மேலும் பின்நோக்கித் தள்ளப்பட்டுள்ளது. எமது மக்களில் சிலரும் ஜே.வி.பி. தமிழ் மக்களுக்குநல்லதுசெய்யும்என்றுமனப்பால் குடிக்கிறார்கள். பனை அபிவிருத்திச்சபையின் வளர்ச்சியையேவிரும்பாதஜே.வி.பியாதமிழ் மக்களுக்கான தீர்வைத் தரப்போகின்றது.

பனை வளத்துறை முகம்கொடுக்கும் சவால்களை எதிர்கொண்டு அதனை வினைத்திறனுடன் இயங்க வைத்து அதனூடாக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனேயே பனை அபிவிருத்திச்சபை 1978ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இதன்தோற்றத்துக்குக்காரணமாகஇருந்த தொழிற்சங்கவாதி கே.சி.நித்தியானந்தா முதலாவது தலைவராக இருந்து திறம்படப் பணியாற்றினார். அதன் பின்னர் தலைவர்களாக இருந்த நடராஜா, கோகுலதாசன் போன்ற ஒருசிலரைத்தவிர பனை அபிவிருத்திச்சபைக்கு தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் இதற்குப் பொருத்தமற்றவர்களாகவே இருந்தார்கள்.

தென்னிலங்கை அரசியல் கட்சிகளில் தேர்தல்களில்போட்டியிட்டுத்தோற்றவர்களும் அக் கட்சிகளின் விசுவாசிகளுமே வேறு போக்கிடமின்றிநியமனம்செய்யப்பட்டதுபோல இங்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

பனை தமிழ் மக்களின் இயற்கை வளங்களில் முதன்மையானது. நீரைப் பற்றிப்பிடிக்கும் நீர்க்காந்தம் போலப் பனை தொழிற்படுவதாலேயே நிலத்தடிநீரை நாம் பெறக்கூடியதாக இருக்கிறது. தமிழ் மக்களின் பிரதானமான பொருளாதார வளமும் பனைதான். ஆனால் பனை இன்று தேடுவாரற்ற, ஒதுக்கப்பட்ட மரம் போல் ஆகிவருகிறது.

பனை அபிவிருத்திச்சபை இப்போது இருப்பது போன்றே தொடர்ந்தால் பனை மரத்துக்குச் சாபவிமோசனமே கிடையாது. மத்திய அரசு நிர்வாகத்தின் கீழ் இருக்கும் பனை அபிவிருத்திச் சபையைத் தொடர்ந்தும் நம்பாமல் மாகாண நிர்வாகத்தின் கீழ் அல்லது சுயாதீனமாகவேனும் பனை வளத்தைப்பேணிப் பனைப் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கு ஒரு அமைப்பை நிறுவவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். துறைசார் வல்லுநர்கள் இதற்கு முன்வரவேண்டும் என மேலும் தெரிவித்தார்.

## தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பாகங்களாகக் கடத்தி வரப்பட்டு 'அசெம்பிள்' செய்யப்பட்ட சொகுசுக் காரைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் லொஹான் கைது செய்யப்பட்டிருந்தார். மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாமலும் பயன்படுத்தப்பட்ட சொகுசுக் காரை லொஹானின் மனைவியின் பெயரிலுள்ள வீட்டிலிருந்து பொலிஸார் கைப்பற்றினர்.

அந்தச் சொகுசுக் காரை தனது தனிப்பட்ட செயலாளர்களில் ஒருவரே அங்கு கொண்டு வந்து நிறுத்தியிருந்தார் என்று லொஹான் ரத்வத்த தெரிவித்திருந்தார். அவர் குறிப்பிட்ட தனிப்பட்ட செயலாளர் அண்மையிலேயே தற்கொலை செய்துகொண்டார். விசாரணைகளின் பின்னர் அந்தக் கார் லொஹான் ரத்வத்தையினால் பயன்படுத்தப்பட்டதை கண்டறிந்த பொலிஸார் அவரைக் கைது செய்தனர். நவம்பர் 7 வரை அவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டதுமே சுகவீனமடைந்த லொஹான் சிறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். தற்போது அவர் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அநுரவும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போரைக் காரணம் காட்டி ஆட்சியாளர்கள் சிங்கள மக்கள் கிளர்ந்தெழாதவாறு அவர்களின் கைகளையும் வாயையும் கட்டிப்போட்டிருந்தனர்.

இப்பொழுது இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல்லாயிரம் கோடி கடனை வெளிநாடுகளுக்குச் செலுத்த வேண்டியுள்ளது. அதேயளவு கடனை உள்நாட்டிலும் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் முன்னர் இருந்த ஆட்சியாளர்களும் சரி, இப்பொழுது வந்திருப்பவர்களும் சரி இந்தப் பொருளாதார பின்னடைவுகளுக்கான சரியான மூலம் எதுவென்பதை வெளியில் சொல்வதற்கு இன்னமும் தயாராகவில்லை.

இப்பொழுது வந்திருக்கக்கூடிய ஜனாதிபதியும் பிரதமரும் தேசிய மக்கள் சக்தி என்றிருக்கக்கூடிய ஜனதா விமுக்தி பெரமுனவின் கூட்டணியில் உள்ளவர்களும் இந்த நாட்டில் ஊழல், இலஞ்சம், நிர்வாகச் சீர்கேடுகள், வீண்விரயச் செலவுகள் இவைகள்தான் இந்த வங்குரோத்து நிலைக்குக் காரணம் எனக்கூறி உண்மையைப் பூசிமெழுக முற்படுகின்றனர்.

ஊழல், இலஞ்சம், நிர்வாகச் சீர்கேடுகள் போன்றவற்றிற்கு முழுமையான காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள் கடந்த காலங்களில் ஆட்சி செய்த சிங்கள ஆட்சியாளர்களும் அவர்களின் நம்பிக்கைக்குரிய நிர்வாகிகளும்தான். தமிழ் மக்களுக்கு அரசாட்சியும் கிடையாது. நிர்வாகமும் கிடையாது. வடக்கு-கிழக்கிலுள்ள நிர்வாகங்களும் கொழும்பினாலேயே ஆட்டிப்படைக்கப்படுகின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், தமிழ் மக்களின் பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டுமாக இருந்தால் தமிழ் மக்களின் கைகளில் அதிகாரங்கள் முழுமையாகக் கிடைக்கப்பெற வேண்டும். ஆனால், முன்னைய ஆளும்தரப்புகளும் சரி இப்பொழுது வந்திருப்பவர்களும் சரி, தமிழ் மக்களுக்கான அதிகாரங்களை வழங்குவதில் பின்நிற்கிறார்கள்.

இலங்கையின் பொருளாதாரம் முன்னோக்கிச் செல்ல வேண்டுமாக இருந்தால், தமிழ் மக்களுக்கான ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். எமக்கான ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படுகின்றபொழுது, புலம்பெயர் தமிழ் மக்களிடமிருந்து பல்லாயிரம்கோடி முதலீடுகள் வருவதுடன் எமது அண்டை நாடான இந்தியா, குறிப்பாக தமிழகத்து தொழிலதிபர்களும்கூட இங்கு முதலீடுகளை மேற்கொள்ள முன்வருவார்கள். அதன் மூலம் ஏற்படுகின்ற வடக்கு கிழக்கின் வளர்ச்சி என்பது ஒட்டுமொத்த இலங்கைக்கும் பெரும் நன்மைகளை ஏற்படுத்தும்.

வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்கும். தொழிற்சாலைகள் அதிகரிக்கும். தொழில்நுட்பக் கல்வி உட்பட கல்விமுறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படும். ஆகவே இப்பொழுது பதவியில் இருக்கின்ற ஜனாதிபதியும் வரவிருக்கின்ற புதிய ஆளும்தரப்பும் இவற்றை ஆழமாக ஆலோசித்து தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள முன்வரவேண்டும்.

இந்த விடயங்கள் தொடர்பாக புதிய ஆளும்தரப்புடன் பேசக்கூடிய வல்லமையுள்ள இவைபற்றித் தெளிவான சிந்தனையுள்ள சரியான உறுப்பினர்களைத் தெரிவுசெய்து நாடாளுமன்றம் அனுப்பவேண்டும். அதற்கு ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியை வெற்றுபெறச் செய்யவேண்டும் - என்று கூறினார்.

### அத்துமீறிய இந்திய மீன்பிடி குறித்து

# இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்தால் 2 லட்சம் மீனவர்கள் நடுத் தெருவில்

### மக்கள் பேராட்ட முன்னணி வேட்பாளர் தெரிவிப்பு

அத்துமீறி இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவது தொடர்பாக இலங்கை அரசு மற்றும் இந்தியத் தரப்புகள் பேச்சு நடத்தி வருகிறது. அந்த ஒப்பந்தம் அமுல்ப்படுத்தப்பட்டால் எமது 2 இலட்சம் மீனவர்கள் வீதிக்கு வரும் நிலையே ஏற்படும் என மக்கள் போராட்ட முன்னணியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் பிரதீபன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டம் பூந்தோட்டத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் இறைமை மற்றும் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு, மதச்சார்பற்ற நாடு, தேசிய உற்பத்தி இவற்றினை மையமாக வைத்து மக்கள் போராட்ட முன்னணியாக இந்த தேர்தலில் நிற்கிறோம்.

நாங்கள் ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுத்தவர்கள். தமிழ் தேசிய அரசியலில் இருப்பவர்கள் தேர்தல் காலத்தில் மாத்திரம் மக்களிடம் வருபவர்களாக இருக்கிறார்கள். ஆனால் மக்கள் சார்பான பிரச்சனையில் உரிய எதிர்த்தரப்பாக இருந்து குரல் கொடுக்கவில்லை என்பதை இங்கு கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

இன்று தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கக்கூடிய நெருக்கடிகள் பல இருக்கின்றன. இந்திய றோலர் படகுகளின் அத்துமீறல் பாரிய பிரச்சனையாக இருக்கிறது. இரு நாட்டு மீனவர்களுக்கும் எமக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. அதனை தொப்புள்கொடி உறவாகவே நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால் ட்றோலர் படகுகளின் அத்துமீறலானது எதிர்காலத்தில் வடபுலத்தில் இருக்கக்கூடிய மீன் வளத்தை அழிக்கும் நிலமைக்கே வித்திடும். இந்தவிடயம் தொடர்பாக இலங்கை அரசும் மற்றும் இந்தியத் தரப்புகள் பேச்சு நடத்தி வருகிறது. அந்த ஒப்பந்தம் அமுல் படுத்தப்பட்டால் எமது 2 இலட்சம் மீனவர்கள் வீதிக்கு வரும் நிலையே ஏற்படும்.

இதுவரையான காலப்பகுதிவரை சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு நாம் தொடர்ச்சியாக சிம்மசொப்பனமான முறையில் மக்கள் போராட்டங்களில் இருந்திருக்கிறோம். வளங்களை அந்நிய சக்திகளுக்கு விற்கமுற்படும்போது அதனை கடுமையாக எதிர்த்திருக்கின்றோம்.

அந்த வகையில் மக்களின் குரலாக வீதிகளில் இருந்த எங்களை எதிர்க்கட்சியாக பாராளுமன்றத்தில் மக்கள் ஏன் அமர்த்தக்கூடாது என்பதை கேட்கவிரும்புகின்றோம். இனமதமொழி பிரதேசம் கடந்து எமது கரங்கள் இந்த மக்களுக்காக உயர்ந்திருக்கின்றது. இரட்டைவேடம் எம்மிடம் இல்லை.

இன்று காசுக்கும் சாராயத்தையும் நம்பி பலர் பிரச்சாரம் செய்கின்றனர். இவர்களுக்கு கொள்கைகளும் இல்லை. இலக்கும் இல்லை. எனவே எதிர்க்கட்சியாக பாராளுமன்றில் எமது குரல் ஒலிக்கும் போது மக்களின் நலன்களை இன்னும் வேகமாக முன்னிறுத்தி கொண்டு செல்லக்கூடியதாக இருக்கும் என்றார்.

(100)

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**

kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# மட்டு. மாவீரர் துயிலும் இல்ல துப்புரவுப் பணிகள் ஆரம்பம்



கொக்கட்டிச்சோலைமாவடிமுன்மாரிமாவீரர்துயிலும் இல்லத்தை துப்புரவு செய்யும் நடவடிக்கையை தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் ஆதரவாளர்கள் வெள்ளிக்கிழமை ஆரம்பித்துள்ளனர்.

இம்மாதம் 27ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளதைமுன்னிட்டுமட்டக்களப்பிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை துப்புரவு செய்யும்





நடவடிக்கையின் ஓர் அங்கமாக வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் ஒன்றிணைந்து மாவடி முன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தை துப்புரவு செய்தனர்.

இம்மாவட்டத்தில் வாகரை கண்டலடி, தரவை, தாண்டியடி, மாவடிமுன்மாரி ஆகிய நான்கு மாவீரர் துயிலும்இல்லங்கள்அமைந்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு அமைச்சு மறுப்பு

ஆலயங்கள்,மதவழிபாட்டுத்தலங்கள்அமைந்துள்ள பகுதிகளில் இருந்து படையினரை விலக்கிக்கொள்ள ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளதாக வெளியாகும் தகவல்களை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.

ஆலயங்களினதும் ஏனைய வழிபாட்டுத்தலங் களினதும் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள படையினரை விலக்கிக்கொள்வதற்கு ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் தவறானவை எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அவ்வாறான தீர்மானங்கள் எவற்றையும் எடுக்கவில்லை. இந்ததகவல்கள்முற்றிலும்தவறானவை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது .(05)

# கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியின் பஸ்ஸின் நிலைமை நாட்டுக்கும் வரலாம்

## *ரணில் எச்சரிக்கை*



கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரியின் பஸ்ஸுக்கு ஏற்பட்ட நிலைமை இலங்கைக்கும் ஏற்படலாம் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்துக்கு அனுபவம் உள்ளவர்களைதெரிவுசெய்யவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அவர், அனுபவம் மிக்க தலைமைத்துவம் இல்லாவிட்டால் இலங்கை மீண்டும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடலாம் என எச்சரித்துள்ளார்.

தற்போதைய ஆளும்தரப்பில் அனுபவம் மிக்கவர்கள் குறைவு எனத் தெரிவித்துள்ள அவர், எதிர்கால நெருக்கடிகளை தவிர்ப்பதற்கு அறிவுள்ள தலைமைத்துவம் அவசியம் என குறிப்பிட்டுள்ளார்.

நான் கடந்தகாலங்களிலும் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்;ளேன். தற்போது எங்கள் குழுவிலிருந்து புதிய அணியை உருவாக்கவேண்டும் என கருதுகின்றேன். இவர்கள் மாத்திரமே நாட்டில் உள்ள அனுபவசாலிகள் என அவர் தெரிவித்துள்ளார்.

தனது அணியினர் மூன்று நான்கு தடவைகள் பதவிவகித்துள்ளனர். நாட்டின் பொருளாதார மீட்சியின் போது குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்துள்ளனர். புதிய நாடாளுமன்றத்தில் அனுபவசாலிகள் இன்மை பின்னடைவாகஅமையலாம்எனஅவர்தெரிவித்துள்ளார்.

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்ட வேகத்தை சுட்டிக்காட்டிய அவர், உலகநாடுகள் கூட நினைத்துபார்க்க முடியாத விடயம் இது எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் அனுபவம் அற்ற தலைமை காரணமாக ஸ்திரதன்மைக்கு பாதிப்பு ஏற்படலாம் எனக் குறிப்பிட்டுள்ளதுடன் இரண்டு மாணவர்கள் உயிரிழப்பதற்கு காரணமாகவிருந்த கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரியின் பஸ் விபத்தை இதனுடன் ஒப்பிட்டுள்ளார்.(05)

**பயணிகளிடம் அதிக வரவேற்புள்ளதால்**

# நாகை – இலங்கை கப்பல் சேவையை வாரத்துக்கு 5 நாள்களாக அதிகரிப்பு

இரு நாட்டு பயணிகளிடம் அதிக வரவேற்பு இருப்பதால், நாகையில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு வாரத்தில் 5 நாள்களுக்கு பயணிகள் கப்பல் இயக்கப்படும் என்று கப்பல் போக்குவரத்து நிர்வாகம் அறிவித்துள்ளது. அதன்படி, வரும்8ஆம்திகதிமுதல்வெள்ளிக்கிழமைகளிலும் கப்பல் சேவை இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாகை - இலங்கை இடையே 'சிவகங்கை' என்ற பயணிகள் கப்பல்சேவை கடந்த ஓகஸ்ட் 16 ஆம் திகதி தொடங்கியது. அப்போது, இரு மார்க்கத்திலும் தினமும் கப்பல் இயக்கப்பட்டது.

இந்த நிலையில், பயணிகள் முன்பதிவு குறைவாக இருந்ததால், செவ்வாய், வியாழன், ஞாயிறு என வாரத்தில் 3 நாள்களாக கப்பல் சேவை குறைக்கப்பட்டது. பின்னர், சனிக்கிழமை உட்பட 4 நாள்களுக்கு கப்பல் சேவை நடைபெற்றது.(05)

# களுத்துறையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் படுகொலை

**சந்தேகநபர் கைது**

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சனிக்கிழமை இரவு கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை, பொலொஸ்ஸகம பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில் 41 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# ஜேர்மன் தூதுவர் பீலிக்ஸ் நியூமனுக்கும் பிரதமர் ஹரினிக்கும் இடையில் சந்திப்பு





பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய மற்றும் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் பீலிக்ஸ் நியுமன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று சனிக்கிழமை பிற்பகல் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

நாட்டின் கல்வித்துறையை அபிவிருத்தி செய்தல், தொழிற் பயிற்சியை மேம்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

இந்த சந்திப்பில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்த்ரி, ஜேர்மன் தூதுக் குழுவின் பிரதானி ஒலாப் மல்வோ, அரசியல் விவகாரம் தொடர்பான ஆலோசகர் தாரிணீ தலுவத்த, ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்காவின் பணிப்பாளர் ச்சதுர பெரேரா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (05)

# கேகாலையில் கேரள கஞ்சா விற்பனை செய்தவர் கைது

கேகாலை நகரத்திற்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றில் கேரள கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என கேகாலை பொலிஸார் தெரிவித்தனர்.

கேகாலைபொலிஸாருக்குகிடைத்ததகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கட்டடத்தின் மேல் மாடியில் உள்ள கழிவறை ஒன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா பொதிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் நீண்ட நாள்களாக இவ்வாறு கேரள கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)




# வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார் எனக் கூறி கோடிக்கணக்கில் மோசடி செய்தவர் கைது

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக கூறி கோடிக்கணக்கான பண மோசடியில் ஈடுபட்ட நபர் 07 வருடங்களாக தலைமறைவாக இருந்த நிலையில் யாழ் . மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மனைவி பிள்ளைகளை பிரிந்து வாழ்ந்து வருவதாக வெளியுலகுக்கு நம்ப வைத்துக்கொண்டு , இரவு வேளைகளில் மனைவி பிள்ளைகளை சந்திக்கச் சென்ற நிலையில் தகவல் அறிந்து பொலிஸார் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில், ஈடுபட்டு குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவரை பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பி வைப்பதாக கூறி பெரும் பண மோசடியில் ஈடுபட்ட கும்பல் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் கடந்த ஜூன் மாதம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கடந்த ஜூலை மாதம் ஒருவரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன் போது , அவருடன் பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட மற்றொரு நபரும் இணைந்து மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்பதனை பொலிஸார் அறிந்து , மற்றைய நபரை கடந்த ஒக்ரோபர் மாதம் கைது செய்தனர்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பிரதான சந்தேகநபர் தலைமறைவாகி உள்ளதாகவும் , அவரது மனைவி பிள்ளைகள் அவரை பிரிந்து கொக்குவில் பகுதியில் வசித்து வருகின்றனர் எனவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

பொலிஸாரின் மேலதிக விசாரணைகளில் பிரதான சந்தேகநபர் மனைவி பிள்ளைகளை பிரிந்து வாழ்வதாக வெளியுலகத்திற்கு நம்ப வைத்துவிட்டு, இரவு வேளைகளில் மனைவி பிள்ளைகளை பார்க்க வந்து செல்வதாக தகவல் கிடைத்துள்ளது.

தகவலின் பிரகாரம் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு ஒரு மணியளவில் கொக்குவிலில் உள்ள வீட்டை பொலிஸார் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டு பிரதான சந்தேகநபரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை, 2017ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பி வைப்பதாக கூறி பண மோசடியில் ஈடுபட்டு யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு பகுதிகளில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் அவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் கடந்த 2017ஆம் ஆண்டு பிடியாணை பிறப்பித்துள்ளது.

அதேவேளை வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஒரு கோடியே 29 லட்ச ரூபா மோசடி வழக்கிலும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக குறித்த பிரதான சந்தேக நபருக்கு எதிராக வவுனியா , யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றங்களில் 3 கோடியே 50 லட்சம் ரூபாவுக்கு அதிமான பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பது பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அதனை அடுத்து குறித்த பிரதான சந்தேகநபரை யாழ் . நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை , சந்தேகநபரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கான தேர்தல் விடுமுறை அறிவிப்பு

இம்மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் தேர்தல் விடுமுறைகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவால் முக்கிய அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படுவதாவது -

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தாம் பணிபுரியும் நிறுவனத்திலிருந்து வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லும் தூரத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த விடுமுறைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து 40 கிலோ மீற்றர் அல்லது அதற்கு குறைந்த தூரத்தில் இருப்பவர்களுக்கு அரைநாள் விடுமுறையும், 40 கிலோ மீற்றரிலிருந்து 100 கிலோ மீற்றருக்கு இடையிலான தூரத்தில் இருப்பவர்களுக்கு ஒரு நாள் விடுமுறையும், 100 கிலோ மீற்றரிலிருந்து 150 கிலோ மீற்றருக்கு இடையிலான தூரத்தில் இருப்பவர்களுக்கு ஒன்றரை நாள் விடுமுறையும், 150 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்தில் இருப்பவர்களுக்கு இரு நாள்கள் விடுமுறைகளும் வழங்கப்படும்.

இதன்போது, அரசமற்றும்தனியார்நிறுவனங்களில் பணிபுரியும்ஊழியர்களின்சம்பளம்மற்றும்தனிப்பட்ட விடுமுறை விதிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# கார் – மோ.சைக்கிள் மோதி விபத்து : ஒருவர் படுகாயம்!



குருணாகல் - மடகல்ல வீதியில் சிறுவர் பூங்காவிற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

கார் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துநர் படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# நல்லூர் பிரதேச சபை ஊழியர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் நல்லூர் பிரதேசசபை ஊழியர் ஒருவர் சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

நல்லூர்பிரதேசசபையில்மேற்பார்வையாளராகக் கடமையாற்றும்43வயதுடைய,மூன்றுபிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார், சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர்.

உடற்கூற்றுபரிசோதனையில், சுருக்கிட்டதாலேயே மரணம்சம்பவித்தமைஉறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# பதுளை பஸ் விபத்தில் காயமடைந்த பல்கலை மாணவன் தப்பியோட்டம்

*பதுளைபஸ்விபத்தில்சிக்கிகாயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பல்கலைக்கழக மாணவன்ஒருவன்வைத்தியசாலையிலிருந்து தப்பிச்சென்றுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்த சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.*

*ஜா - எல அலெக்சாண்டர் மாவத்தை பகுதியில் வசிக்கும் 24 வயதுடைய பல்கலைக்கழக மாணவனே தப்பிச் சென்றுள்ளார்.*

*இந்த மாணவன் கடந்த முதலாம் திகதி பதுளை, துன்ஹிந்த - அம்பகஹஓய 5 ஆவது மைல்கல் பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்திலேயே சிக்கி காயமடைந்தார்.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் பதுளை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.*

*(05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.11.2024இல் வெளியிடப்பெற்றது